பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 09 2026 TUESDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தடையற்ற வங்கி சேவைகளை உறுதி செய்ய வேண்டும் என்று பொதுத்துறை மற்றும் மண்டல ஊரக வங்கி ஊழியர்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

2. கனிமங்களை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களிலும் இம்மாதத்திற்குள் GPS கருவி கட்டாயம் பொருத்தப்பட வேண்டும் என்று மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

3. தமிழகத்தில் நிலவும் ஆவின் பால் தட்டுப்பாட்டை மாநில அரசு உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்று பிஜேபி மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளது.

4. தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென்தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டு போட்டியில், மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

தடையற்ற வங்கி சேவைகளை உறுதி செய்ய வேண்டும் என்று பொதுத்துறை மற்றும் மண்டல ஊரக வங்கி ஊழியர்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வாரத்தில் ஐந்து நாட்கள் பணி மற்றும் செயல்பாட்டுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தை திரும்பப் பெறுதல் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ள நிலையில், செயல்பாட்டுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தை அரசு கைவிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் வலியுறுத்தி, கடந்த 11ஆம் தேதி வேலைநிறுத்தம் நடைபெற்ற நிலையில், மேலும் வரும் 26ஆம் தேதி மற்றும் 28ஆம் தேதி முதல் 30ஆம் தேதிவரையும் அறிவிக்கப்பட்டுள்ள வேலைநிறுத்தத்தால், வங்கிப் பணிகளும், மக்களுக்கான சேவைகளும் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில், பொதுத்துறை வங்கிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக கூறப்பட்டுள்ளது.

வங்கிப் பணியாளர்களின் பணிச்சூழல், வெளிப்படைத்தன்மை, அவர்களின் நலன் ஆகியவற்றை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் வங்கிச் சேவை அத்தியாவசியமானது என்றும், இச்சேவை பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது.

வங்கி ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு, மாதத்தில் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமை, பொதுத்துறை வங்கிகளுக்கு விடுமுறை என்று கடந்த 2015ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வருவது அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மற்ற சனிக்கிழமைகளில் வங்கிச் சேவைகள் எளிதாக கிடைப்பது மக்களுக்கு அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை கைவிட்டு, பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் வங்கிகளின் தடையற்ற சேவையை உறுதி செய்ய வேண்டும் என்றும் மத்திய நிதியமைச்சகம் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

தில்லி தமிழ் மாணவர்கள் சங்கத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனை புதுதில்லியில் சந்தித்து பேசினர்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் எல். முருகன், தில்லி மற்றும் தேசிய தலைநகர் பிராந்தியத்தில் உள்ள தமிழக மாணவர்களின் கல்வி, நலன், கலாச்சார ஈடுபாடு மற்றும் முன்னேற்றம் குறித்து அவர்களுடன் கலந்துரையாடியதாக கூறியுள்ளார்.

நமது தமிழ்மொழி, பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை மேலும் சிறப்பாக எடுத்துச் செல்ல மாணவர்களுக்கு தாம் வாழ்த்து தெரிவித்ததாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

கனிமங்களை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களிலும் இம்மாதத்திற்குள் GPS கருவி கட்டாயம் பொருத்தப்பட வேண்டும் என்று மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. T.K. பிரபு வலியுறுத்தியுள்ளார்.

சுரங்கத்துறையின் பல்வேறு பணிகள் குறித்து அதிகாரிகளுடன் சென்னையில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

சட்டவிரோத குவாரிகளை தடுப்பதற்கும், அனுமதியின்றி கனிமங்களை எடுத்துச் செல்வதை தடுப்பதற்கும், வாகனங்களில் GPS கருவி கட்டாயம் என்று அவர் தெரிவித்தார்.

நிலுவையில் உள்ள குத்தகை கோரும் விண்ணப்பங்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், புதிய குவாரிகளை செயல்பாட்டுக்கு கொண்டு வருமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்காக மாவட்ட ஆட்சியர்கள் மூலம் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்கை முழுமையாக அடையுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் திரு. டி.கே. பிரபு அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் பணியாற்றும் பருவகால பணியாளர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்று தேமுதிக வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பணியாற்றி வரும் பருவகால பணியாளர்கள் தங்களை பணிநிரந்தரம் செய்து, உரிய பணிப்பலன்கள் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிய நிர்வாகம் மற்றும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, அவர்களின் கோரிக்கைகளுக்கு விரைவாக தீர்வு காண வேண்டும் என்றும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த், மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் நிலவும் ஆவின் பால் தட்டுப்பாட்டை மாநில அரசு உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பாலின் கொள்முதல் விலையை உயர்த்தி விட்டு, அரசு முறையாக கொள்முதல் செய்யாததால், விற்பனை பாதிக்கப்படுகிறதா, அல்லது தனியார் பால் விற்பனையை

பெருக்குவதற்காக ஆவின் பால் விநியோகத்தை அரசு குறைக்கிறதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலை தொடர்ந்தால், கறவை மாடுகள் வைத்திருக்கும் விவசாயிகள், ஆவின் பாலை மட்டுமே நம்பியிருக்கும் குடும்பத்தினர் பாதிப்படைவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

எனவே, ஆவின் பால் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென்தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அது கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை மற்றும் இரவு நேரங்களில் சில பகுதிகளில் லேசானது

முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று மாலை பெய்த காற்றுடன் கூடிய கனமழை காரணமாக, சாலைகளில் நீர் தேங்கியதால், பொதுமக்கள் பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துணை அதிபர் திரு. Sheikh Ahmed Bin Rashid Al Maktoum மறைவை ஒட்டி, 10 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பயனாளர்களின் இருப்பிட தரவு குறித்து, தவறாக கையாண்டதற்காக கூகுள் நிறுவனத்திற்கு அயர்லாந்து தரவு பாதுகாப்பு ஆணையம் 463 மில்லியன் அமெரிக்க டாலர் அபராதம் விதித்துள்ளது.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநில மீன்வளத்துறையின் வளர்ச்சிக்கு 90 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

>>>>>><<<<<<

கேரளத்தின் நிலம்பூரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

கரூரில், ஜவுளி ஏற்றுமதியை மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியர் திருமதி. சினேகா மாற்றுத் திறனாளிகளிடம் குறைகளை கேட்டு, கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

>>>>>><<<<<<

கல்வியை கொண்டாடுவோம் என்ற சிறப்பு போட்டியில் வெற்றிபெற்ற 48 மாணவர்களுக்கு, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் வழங்கினார்.

>>>>>><<<<<<

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி முதல் கடம்பன்குளம் வரை அமைக்கப்பட்டு வரும் புதிய சாலைப் பணிகளை மாநில அமைச்சர் திரு. மதன்ராஜா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அருகே நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

திருத்தணி அருகே நெடுஞ்சாலையில் நேரிட்ட இருவேறு சாலை விபத்துகளில் 3 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட அரசு மருத்துவமனைகளில், ஒப்பந்த செவிலியர்களாக பணிபுரிய வரும் 25ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய விளையாட்டு போட்டியில், மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

ஜப்பானில் இப்போட்டி, காலை மணி 10.30-க்கு தொடங்குகிறது.

பேட்மிண்டன் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

இந்தியா - ஜப்பான் அணிகளுக்கு இடையேயான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஜப்பானின் Sano-நகரில் நடைபெறவுள்ள இப்போட்டி, காலை மணி 9.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

இந்தியா-ஏ - ஆஸ்திரேலியா-ஏ அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புதுச்சேரியில் இன்று தொடங்குகிறது

>>>>>><<<<<<

செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்திய மகளிர் அணி 6வது சுற்றில் வெற்றிபெற்றது.

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா, 3-1 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவை வென்றது.

இந்திய அணியின் வந்திகா, சவிதாஸ்ரீ ஆகியோர் தத்தமது போட்டிகளில் வெற்றி பெற்றனர்.

ஓப்பன் பிரிவில் இந்தியா - உஸ்பெகிஸ்தானிடம் தோல்வியடைந்தது.

>>>>>>END<<<<<<<